

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2050 அக்டோபர் 17, 2019 புரட்சி 18 முழக்கம் 40 விலை: ரூ.3.00

# தமிழகத்தில் இரயில் பெட்டி தொழிற்சாலை தனியார் துறைக்குப் போகிறது

இரயில் பெட்டித் தயாரிப்பில் உலகப் புகழ் பெற்ற இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்), சென்னையில் இருக்கிறது. இங்கே, கடந்த சில வாரங்களாக அமைதியற்றச் சூழல் நிலவுகிறது. கார்ப்பரேஷனாக மாற்றப் போகிறோம் என்ற பெயரில் தனியார் மயமாக்குவதற்கான முயற்சி நடப்பதாக தி.மு.க. அ.தி.மு.க மற்றும் பா.ஜ.க-வின் தொழிற் சங்கங்கள் உட்பட அத்தனை தொழிற் சங்கங்களும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன.

தனியார் ரயில்களுக்கு அனுமதி அளிப்பது, ஐ.சி.எஃப் உள்ளிட்ட ரயில்வேயின் முக்கிய உற்பத்திக் கேந்திரங்களை கார்ப்பரேஷனாக மாற்றுவது என்ற முடிவானது, மத்திய அரசின் 100 நாள் செயல்திட்டத்தின் முக்கியமான அம்சம். அதன்படி, டெல்லி லக்னோ இடையே தனியார் ரயில் சோதனை ஓட்டம் தொடங்கியுள்ளது. அடுத்து, டெல்லி அகமதாபாத் இடையே தனியார் ரயில் சோதனை ஓட்டம் தொடங்கவுள்ளது. இதையடுத்து உற்பத்திக் கேந்திரங்களை கார்ப்ப ரேஷனாக மாற்றும் நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதாகவும் தகவல் வருவதால், பதறிக்கிடக்கிறார்கள் தொழிலாளர்கள்.

‘‘தமிழகத்தின் பெருமையை தனியாருக்குத் தாரைவார்க்கத் துடிக்கிறார்கள்!’’

மேற்கு வங்கத்தில் உள்ள சித்தரஞ்சன் லோகோ ஒர்க்ஸ், உத்தரப்பிரதேசம் வாரணாசியில் செயல்பட்டுவரும் டீசல் லோகோமோடிவ் ஒர்க்ஸ், பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் இயங்கிவரும் டீசல் லோகோ மாடர்னைசேஷன் ஒர்க்ஸ் ஆகிய மூன்று தொழிற்சாலைகளும் ரயில் இன்ஜின் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன. பஞ்சாப் மாநிலம் கபூர்தலாவில் உள்ள ரயில் கோச் ஃபேக்டரி, உத்தரப்பிரதேசம், ரேபரேலியில் உள்ள மாடர்ன் கோச் ஃபேக்டரி, சென்னையில் உள்ள இணைப்புப் பெட்டி தொழிற்சாலை (ஐ.சி.எஃப்) ஆகிய மூன்று தொழிற்சாலைகளும் ரயில் பெட்டி தயாரிப்பில் ஈடுபட்டுவருகின்றன. இவைபோக, பெங்களூரில் ரயில் வீல் ஃபேக்டரி என்ற தொழிற்சாலை ரயில் சக்கரங்களைத் தயாரிக்கிறது. அரசு நிறுவனங்களான இந்த ஏழு உற்பத்திக் கேந்திரங்களையும் கார்ப்பரேஷனாக மாற்ற, மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொல்கிறார்கள்.

**தமிழகத்தின் பெருமை!**

சென்னை பெரம்பூரில் 1955-ல் அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேருவால் தொடங்கப்பட்ட ஐ.சி.எஃப், சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ளது. அதிக எண்ணிக்கையிலும் ஏராளமான மாடல்களிலும் இரயில் பெட்டிகளைத் தயாரிப்பதால், இந்திய அளவில் புகழ்பெற்ற தொழிற்சாலையாகத் திகழ்கிறது ஐ.சி.எஃப். இங்கு தயாரிக்கப்பட்ட ரயில்கள் மற்றும் இரயில் பெட்டிகள் இலங்கை, பங்களாதேஷ், மலேசியா உட்பட 17 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. புறநகர் ரயில்கள், மின்சார ரயில்கள் உள்ளிட்ட வழக்கமான ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதோடு ஐ.சி.எஃப் நின்றுவிடவில்லை. பிரமிக்கத்தக்க வகையிலான சொகுசு ரயில் பெட்டிகளையும், அரண்மனை போன்ற வசதிகளுடன் கூடிய பேலஸ் ஆன் வீல்ஸ், மஹாராஜா எக்ஸ்பிரஸ், டெக்கான் ஒடிஸி போன்ற அதிநவீன சொகுசு ரயில் பெட்டிகளையும் தயாரித்து அசத்தியிருக்கும் ஐ.சி.எஃப் நிறுவனத்தின் சமீபத்திய சாதனை, ‘டிரெயின் 18’ என்றழைக்கப்படும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ். இது, முழுக்க முழுக்க ஐ.சி.எஃப் நிறுவனத்தின் சொந்த தயாரிப்பு. இந்த ரயிலைத்தான் கடந்த பிப்ரவரியில் பெருமிதத்துடன் தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி.

இதுகுறித்து ஐ.சி.எஃப் யுனைடெட் ஒர்க்கர்ஸ் யூனியன் (சி.ஐ.டி.யூ) தலைவரான ராஜாராம் கூறுகிறார்: ‘‘ஐ.சி.எஃப் உள்ளிட்ட ஏழு உற்பத்திக் கேந்திரங்களும், இந்திய ரயில்வேக்குத் தேவையான ரயில் இன்ஜின்கள், ரயில் பெட்டிகள் மற்றும் உதிரிபாகங்களைத் தயாரித்துக் கொடுக்கின்றன. அரசு நிறுவனமாக இருப்பதால்தான் ஏராளமான சாதனைகளைப் படைத்துள்ளோம். வில்லுப் பட்டறை போன்ற பழங்காலத் தொழில்நுட்பத்தில் ஆரம்பித்து அதிநவீன தொழில்நுட்பமான லேசர் கட்டிங் வரை தன்னை காலத்துக்கு ஏற்றவாறு உருமாற்றி வளர்ந்திருக்கிறது ஐ.சி.எஃப். தொழிலாளர் களும் தொழில்நுட்பரீதியாக முன்னேறியுள்ளனர். அதனால்தான் எங்களால் அடுத்தடுத்த உயரங்களைத் தொட முடிந்தது.

வந்தே பாரத் எக்ஸ்பிரஸ், முழுக்க முழுக்க எங்களின் சொந்த தயாரிப்பு. நூறு கோடி ரூபாயில் அதைத் தயாரித்துள்ளோம். இப்போது வடிவமைப்பு கையில் இருப்பதால், அது போன்ற ரயிலை இனி 70 கோடி ரூபாயில் தயாரித்துவிட முடியும். ஆனால், அதே ரயிலை வெளி நிறுவனத்திடம் வாங்கினால் 230 கோடி ரூபாய் செலவாகும். ஐ.சி.எஃப் உள்ளிட்ட உற்பத்திக் கேந்திரங்களில் தயாரிக்கப்படும் ரயில்களை இந்திய ரயில்வே இயக்குவதால், பயணிகளிடம் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

உதாரணமாக, எழும்பூரிலிருந்து கிண்டி செல்வதற்கான கட்டணம் வெறும் ஐந்து ரூபாய் தான். ஐ.சி.எஃப் உள்ளிட்ட ஏழு உற்பத்திக் கேந்திரங்களும் கார்ப்பரேஷனாகிவிட்டால், அவற்றிடமிருந்து இந்திய இரயில்வே விலை கொடுத்துதான் பொருள்களை வாங்க வேண்டியிருக்கும். இதனால், தொழிலாளர்களின் பணிப் பாதுகாப்பு பாதிக்கப் படும். தொழிலாளர்கள் தற்போது அனுபவித்துவரும் உரிமைகள் பறிபோகும். வேலைவாய்ப்புகளில் சமூகநீதி பாதிக்கப்படும்’’ என்கிறார்.

**வளர்ச்சியா வீழ்ச்சியா?**

இதுகுறித்து இந்திய ரயில்வே தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் மூத்த இணை பொதுச்செயலாளர் கே.வி.ரமேஷ் கூறுகிறார்: “இரயில்வே தொழில்நுட்பங்கள் குறித்து சிறப்பாகப் படிப்பதற்கு இந்தியாவில் இன்ஜினீயரிங் கல்லூரியோ, ஆராய்ச்சி நிறுவனமோ கிடையாது. பிரதமர் முன்வைத்த ‘மேக் இன் இந்தியா’ திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டுமென்றால், ரயில்வே தொழில்நுட்பங்களைக் கற்றுத்தரும் கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டும். **வெளிநாடுகளிலிருந்து ரயில்களை வாங்கிக் கொண்டிருந்த சீனா, கடந்த 20 ஆண்டுகளில் ரயில் தயாரிப்பில் மிகப்பெரிய வளர்ச்சியடைந்துள்ளது. அதற்குக் காரணம், ரயில்வே தொழில்நுட்பங்கள் கற்றுத்தர அங்கு சுமார் 50 கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், இங்கு சிறப்பாகச் செயல்பட்டு வரும் உற்பத்திக் கேந்திரங்களை மேலும் வளர்ப்பதற்குப் பதிலாக, தனியாருக்குத் தாரைவார்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள்.** கார்ப்பரேஷனாக மாற்றினாலும் சரி, தனியார் மயமாக்கினாலும் சரி, சேவை நோக்கம் அடிபட்டுவிடும். இதனால் தொழிலாளர்கள் மட்டுமல்ல... பொதுமக்களும் பாதிக்கப்படுவார்கள்’’ என்றார் கவலையுடன். ●

– புரட்சிப் பெரியார் முழக்கம் 17.10.2019

## மயிலாடுதுறையில் ஒரு நாள் பயிற்சி முகாம்



நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 8.10.2019 அன்று பெரியாரியல் பயிற்சி முகாம் கீழ் நாஞ்சில் நாடு பகுதியிலுள்ள பாலாஜி திருமண மண்டபத்தில் நடந்தது. குடந்தைப் பகுதியில் கழகத்தில் இணைந்த தோழர்கள் தரங்கம்பாடி நன்னிலம் பகுதி மற்றும் மயிலாடுதுறைத் தோழர்கள் ஆதரவாளர்கள் 68 பேர் கலந்து கொண்டனர்.

பெரியார் யுவராஜ் கடவுள் ஆத்மா மறுப்பு கூறினார். தலைமைக் குழு உறுப்பினர் இளைய ராஜா பயிற்சி முகாம் நோக்கத்தை விளக்கிப் பேசினார். தஞ்சை தோழர் பசு. கவுதமன், சாக்கோட்டை இளங்கோவன் உரையைத் தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் இயக்கத்தின் அடிப்படை இலட்சியம் அணுகுமுறை பெரியார் இயக்கத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து வகுப்புகள் எடுத்தனர். பயிற்சியாளர்கள் ஏராளமான கேள்விகளை எழுப்பினர். அதற்கு கழகத் தலைவர், பொதுச் செயலாளர் விளக்கமாக பதில் அளித்தனர். மாலை 7 மணி வரை பயிற்சி வகுப்பு நடந்தது. மயிலாடுதுறை கழகத் தோழர்கள் பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# ஓம் ‘ரபேல்’ நமஹ!

பிரான்ஸ் துறைமுக நகரான போர்டோவில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ரபேல் போர் விமானத்தைப் பெற்றுக் கொண்டாராம். அதற்கு அவர் தேர்வு செய்த நாள் விஜயதசமி. முதல் ரபேல் போர் விமானத்தை ராஜ்நாத் சிங் எப்படி பெற்றுக் கொண்டார்?

விமான டயரின் கீழ் எலுமிச்சை வைத்து, விமானத்தின் மீது தேங்காய், பூ உள்ளிட்ட பூஜைக்குரிய பொருள்களை வைத்தாராம். இந்தி மொழியில் ‘ஓம்’ என்று விமானத்தில் எழுதி பூஜை செய்திருக்கிறார்.

“உள்ளே இருக்கிற 250 ‘ஸ்பேர்பார்ட்ஸ்’ல ஓடாத லாரி, இந்த எலுமிச்சம் பழத்திலேயடா, ஓடப் போவுது?” என்று நடிகர் விவேக் ஒரு படத்தில் கேட்பார். பிரான்ஸ் தேசத்தில் விமானத்தை உருவாக்கிய விஞ்ஞானிகள் இந்தக் காட்சியைப் பார்த்து திக்குமுக்காடியிருப்பார்கள். தேங்காய், பூ, எலுமிச்சை எல்லாம் ரபேல் போர் விமானத்தைவிட சக்தி வாய்ந்ததா? இது என்ன புதிய கதை என்று எள்ளி நகையாடியிருப்பார்கள்.

சரசுவதி பூஜையின்போது குழந்தைகள் பாட நூல்களை வைத்து பூஜை செய்யச் சொல்லுவார்கள். அப்போதுதான் குழந்தைகளுக்கு கல்வி ஆர்வம் பெருகி, ‘சரசுவதி’ நாக்கில் தாண்டவமாடுவாள் என்பது, பக்தியாளர்கள் நம்பிக்கை. சரசுவதி பூஜை நடக்கும் நாட்டில் ‘சரசுவதி’ கிராமத்து மக்களிடம் போய் விடக்கூடாது என்பதற்காக ‘நீட்’டை கொண்டு வந்து விட்டனர். 3ஆம் வகுப்பு 5ஆம் வகுப்புக்கு பொதுத் தேர்வு வைத்து ‘சரசுவதி’ கடாட்சம் குழந்தைகளுக்கு கிடைத்து விடாமல் தடுக்கிறார்கள். உண்மையிலேயே இந்துக் கடவுளான ‘சரசுவதி’யை அவமதிப்பவர்கள், இவர்கள்தான்!

அதேபோல தங்கள் தொழில் நன்றாக வளர்ந்து வருவாய் பெருக வேண்டும் என்ற நம்பிக்கையோடு நம்பிக்கையாளர்கள் தொழிற்சாலைகளுக்கும் தொழில் கருவிகளுக்கும் ஆயுத பூஜை போடுகிறார்கள். தொழில் துறை வளர்ந்து விடக் கூடாது என்று ஜி.எஸ்.டி, பணமதிப்பிழப்பு போன்ற நடவடிக்கையில் இறங்கி ஆயுத பூஜை போட்டாலும் தொழில் வளர்ச்சியடையாது என்று செயல்படுவது பா.ஜ.க. ஆட்சி தான்.

ரபேல் போர் விமானத்துக்கு ஏன் ராஜ்நாத் ஆயுத பூஜை போடுகிறார்? இந்தியாவில் போர் நடவடிக்கைகள் ஏராளம் நடந்து போர் விமானங்களின் குண்டு வீச்சுகள் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவா என்று ஒரு கருப்புச் சட்டைக்காரர் கேட்டார். கேள்வி நியாயமானதுதான். அவரது கேள்விக்கு நம்மிடம் பதில் ஏதுமில்லை.

பூஜை, சடங்குகள் நடத்தி நல்ல நேரம் பார்த்து இஸ்ரோ விஞ்ஞானிகள் அனுப்பிய ‘சந்திராயன் -2’ ஏன் நிலவைச் சென்று அடையவில்லை என்றும் பகுத்தறிவாளர்கள் கேட்கிறார்கள். இப்படிப்பட்ட அறிவியல் அடிப்படையிலான கேள்விகளைக் கேட்டால், ‘தேச விரோத சட்டம்’ பாய்ந்து குதறிவிடக் கூடும்!

வரலாற்றில் நடந்த ஒரு நிகழ்வு நினைவுக்கு வருகிறது. தஞ்சையை செங்கமலதாசன் என்பவன் ஆட்சி செய்த காலத்தில் அரசரை எதிர்த்து வெங்காஜி என்பவன் படை திரட்டி நாட்டைக் கைப்பற்ற வந்தான். போர் என்றால் நடுங்கும் செங்கமலதாசன், ‘பிராமணர்’களின் ஆலோசனையை கேட்டான். அவர்கள் ஒரு அதிரடித் திட்டத்தைத் தந்தார்கள். “அரசே நம் நாட்டின் எல்லைப் பகுதியில் கடவுள் திருமாலுக்கு விருப்பமான துளசி செடிகளை மலை போல குவித்து வைத்துவிட்டால் போரைத் தடுக்கலாம்” என்று கூறினார்கள். இஸ்லாமிய மன்னனின் படைத் தளபதி வெங்காஜி, வைதீக மதத்தைச் சார்ந்த வைணவன். அவன் இஸ்லாமிய அரசனின் படைத் தளபதியாக இருந்தாலும், துளசிச் செடிகளைத் தாண்டி உள்ளே வரமாட்டான், திரும்பி விடுவான் என்பதே பார்ப்பனர்கள் தந்த ஆலோசனை. அப்படியே துளசி செடிகள் மலைபோல எல்லைகளில் குவிக்கப்பட்டன. ஆனால் வெங்காஜி படையில் வந்த குதிரைகளுக்கு துளசி செடி தீனியானது; குதிரைகள் மேய்ந்து தள்ளின. வெங்காஜியின் படை போர் நடத்தாமல் வாளை உருவாமலே தஞ்சையைக் கைப்பற்றி விட்டது. இது வரலாறு.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் ‘பாரத’ தேசத்துக்காக வாங்கிய ‘ரபேல் விமானம்’கூட அதற்குள் எலுமிச்சை உள்ளிட்ட பூஜை பொருள்களோடு ‘ஓம்’ என்ற சக்தியுள்ள நாமத்தையும் ஏவியதால் “தெய்வீக சக்தி” முன் போர் நடத்தும் தேவை இல்லாமலேயே வெற்றி அடைந்து விடும் என்று பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் நம்பியிருப்பார் போலிருக்கிறது.

இனி இந்தியா மீது எந்த நாடாவது ஆக்கிரமிக்க நினைத்தால் அவ்வளவுதான்.

எலுமிச்சை, பூ-வுடன் ஓம் சக்தியும் சேர்த்து விரட்டி அடித்து விடலாம்.

ஆக, இந்து தேசத்தை உருவாக்க போர் வேண்டும்; போரில் வெற்றி பெற ரபேல் விமானமோ, நீர் மூழ்கிக் கப்பலோ மட்டும் போதாது. பூஜையும் சடங்கும் வேண்டும். தேவைப்பட்டால் ‘பூணூல்’ சக்தியையும் ‘காயத்திரி’ ஓதிசெலுத்தி விடலாம். பூணூல் சக்தி அணுகுண்டையும் வீழ்த்தி விடும்.

**- கோடங்குடி மாரிமுத்து**

# தீபாவளி: பகுத்தறிவுக்கு எதிரானது

பண்டித, பாமர, பணக்கார ஏழைச் சகோதரர்களே! எவ்வளவு பண்டிகை கொண்டாடினீர்கள்! எவ்வளவு யாத்திரை செய்தீர்கள்? இவற்றிற்காக எவ்வளவு பணச் செலவும் நேரச் செலவும் செய்தீர்கள்? எவ்வளவு திரேகப் பிரயாசைப்பட்டீர்கள் என்பதை யோசித்துப் பார்த்தால், நீங்கள் புராணப் புரட்டை உணர்ந்து புராண ஆபாசத்தை அறிந்தவர்களாவீர்களா? வீணாய்க் கோபிப்பதில் என்ன பிரயோசனம்? இந்த விஷயங்களை வெளியில் எடுத்து விளக்கிச் சொல்லுகின்றவர்கள் மீது ஆத்திரம் காட்டி அவர்களது கண்ணையும், மூக்கையும், தாடியையும், தலைமயிரையும் பற்றிப் பேசுவதால் என்ன பயன்? ‘நீ ஏன் மலத்தில் மூழ்கி இருக்கின்றாய்?’ என்றால், அதற்கு, நீ தமிழ் இலக்கணம் தெரியாதவன்’ என்று பதில் சொல்லிவிட்டால் மலத்தின் துர்நாற்றம் மறைந்து போகுமா? இதைப் பார்ப்பனரல்லாத மக்கள் 1000-த்துக்கு 999 பேர்களுக்கு மேலாகவே கொண்டாடப் போகின்றீர்கள்.

பெரிதும் எப்படிக் கொண்டாடப் போகின்றீர்கள் என்றால், பொதுவாக எல்லோரும் அதாவது துணி தேவை இருக்கின்றவர்களும், தேவை இல்லாதவர்களும் பண்டிகையை உத்தேசித்துத் துணி வாங்குவது என்பது ஒன்று;

மக்கள் மருமக்களை மரியாதை செய்வதற்கென்று தேவைக்கும், யோக்கியதைக்கும் மேலானதாகவும், சாதாரணமாக உபயோகப்படுத்து வதற்கு ஏற்றதல்லாததுமான துணிகள் வாங்குவது என்பது இரண்டு;

அர்த்தமற்றதும் பயனற்றதுமான வெடிமருந்து சம்பந்தப்பட்ட பட்டாசு வகைகள் வாங்கிக் கொளுத்துவது மூன்று;

பலர் இனாம் என்றும், பிச்சை என்றும் வீடு வீடாய்க் கூட்டங் கூட்டமாய்ச் சென்று பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பணம் வாங்கி அதை பெரும்பாலும் சூதிலும், குடியிலும் செலவழித்து நாடு சிரிக்க நடந்து கொள்வது நான்கு;

இவற்றிற்காகப் பலர் ஊர்விட்டு ஊர் பிரயாணம் செய்து பணம் செலவழிப்பது அய்ந்து;

அன்று ஒவ்வொரு வீட்டிலும் அபரிதமான பதார்த்த வகைகள் தேவைக்கு மிகுதியாகச் செய்து அவைகளில் பெரும்பாகம் கண்டவர்களுக்குக் கொடுப்பதும், வீணாக்குவது ஆறு;

இந்தச் செலவுகளுக்காகக் கடன்படுவது ஏழு;

இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ, ‘சயின்ஸ்’ பொருத்தமோ சொல்லுவதானாலும் தீபாவளிப் பண்டிகை என்றால் என்ன? அது எதற்காகக் கொண்டாடப்படுகிறது?

**தத்துவமோ, அறிவியலோ உண்டா?**

மற்றும் இதுபோன்ற பல விஷயங்கள் செய்வதன் மூலம் பணம் செலவாகின்றது என்பதும், அதற்காகக் கடன்பட வேண்டியிருக்கிறது என்பதுமான விஷயங்களொரு புறமிருந்தாலும் மற்றும் இவைகளுக்கெல்லாம் வேறு ஏதாவது தத்துவார்த்தமோ, ‘சயின்ஸ்’ பொருத்தமோ சொல்லுவதானாலும் தீபாவளிப் பண்டிகை என்றால் என்ன? அது எதற்காகக் கொண்டாடப்படுகிறது? என்கின்றதான விஷயங்களுக்குச் சிறிதுகூட எந்த விதத்திலும் சமாதானம் சொல்ல முடியாது என்றே சொல்லுவோம்.

ஏனெனில், அது எப்படிப் பார்த்தாலும் பார்ப்பனியப் புராணக் கதையை அஸ்திவாரமாகக் கொண்டதாகத்தான் முடியுமே ஒழிய, மற்றபடி எந்த விதத்திலும் உண்மைக்கோ, பகுத்தறிவுக்கோ, அனுபவத்துக்கோ சிறிதும் ஒத்ததாக இருக்க முடியவே முடியாது. பாகவதம், இராமாயணம், பாரதம் முதலிய புராண இதிகாசங்கள் பொய் என்பதாகச் சைவர்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகள் பொய் என்று வைணவர்கள் எல்லாரும் ஒப்புக் கொண்டாய் விட்டது. இவ்விரு கூட்டத்திலும் பகுத்தறிவுள்ள மக்கள் பொதுவாக இவை எல்லாவற்றையும் பொய் என்று ஒப்புக் கொண்டாய்விட்டது. அப்படியிருக்க, ஏதோ புராணங்களில் இருக்கின்ற கதைகளைச் சேர்ந்த பதினாயிரக்கணக்கான சம்பவங்களில் ஒன்றாகிய, தீபாவளிப் பண்டிகைக்கு மாத்திரம் மக்கள் இந்த நாட்டில் இவ்வளவு பாராட்டுதலும் செலவு செய்தலும், கொண்டாடுதலும் செய்வ தென்றால் அதை என்னவென்று சொல்லவேண்டும்?

தீபாவளிப் பண்டிகையின் தத்துவத்தில் வரும் பாத்திரங்கள் மூன்று. அதாவது நரகாசுரன், கிருஷ்ணன், அவனது இரண்டாவது பெண் சாதியாகிய சத்தியபாமை ஆகியவைகளாகும். எந்த மனிதனாவது கடுகளவு மூளை இருந்தாலும் இந்த மூன்று பேரும் உண்மையாய் இருந்தார்கள் என்றாவது, அல்லது இவர்கள் சம்பந்தமான தீபாவளி நடவடிக்கைகள் நடந்தவை என்றாவது, அவற்றிற்கும் நமக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டு என்றாவது, அதற்காக நாம் இந்த மாதிரியான ஒரு பண்டிகை தீபாவளி என்று கொண்டாட வேண்டுமென்றாவது ஒப்புக் கொள்ள முடியுமாவென்று கேட்கின்றோம்.

**- பகுத்தறிவு, 1936**

# தேசத் துரோகச் சட்டம் – தேசத்துக்கு அவமானம்!

***பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட தேச துரோகச் சட்டம் கருத்து உரிமையைப் பறிக்கிறது.***

தமிழ்நாட்டில் சமீபத்தில் வைகோ மீது தேசத் துரோகச் சட்டம் பாய்ந்தது. கலைஞர்கள், ஆய்வாளர்கள் என்று 49 பேர் பிரதமருக்கு, கும்பல் கொலையைத் தடுத்து நிறுத்தச் சொல்லிக் கடிதம் எழுதிய ஆளுமைகள் மீது தேசத் துரோகச் சட்டம் பாய்ந்திருக்கிறது. இதனால், பழமையான அந்தக் காலனிய சட்டத்தின் மீது மறுபடியும் வெளிச்சம் விழுந்திருக்கிறது. தேசத் துரோகச் சட்டமானது அரசியல், கலாச்சார ரீதியான எதிர்ப்பை ஒடுக்குவதற்காக இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நுழைக்கப்பட்டது. இந்தச் சட்டம் அரசாங்கத்துக்கு எதிராக அவநம்பிக்கையை அல்லது வெறுப்பைப் பரப்புவதைக் குற்றமாக்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் காந்தி, பால கங்காதர திலகர், ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் பலர் மீது தேசத் துரோகச் சட்டம் பாய்ந்திருக்கிறது. வைகோவுக்கு எதிராக மட்டுமல்ல, சமீப காலம் வரை அது தொடர்ச்சியாகப் பலர் மீது பாய்ந்திருக்கிறது. அணுஉலை எதிர்ப்பாளர்கள், ஒரு கேலிச் சித்திரக்காரர், தங்கள் நிலத்தைப் பெருநிறுவனங்கள் எடுத்துக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கற்பலகைகள் மீது அரசமைப்புச் சட்டப் பிரிவுகளைச் செதுக்கித் தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்த ஜார்க்கண்டின் கிராமம் ஒன்றின் பூர்வ குடியினர் என்று இந்தப் பட்டியல் நீள்கிறது.

### பொன்னான வாய்ப்பு

ஆனால், பலராலும் வெறுக்கப்படும் இந்த காலனியச் சட்டம் சுதந்திர இந்தியாவில், அதுவும் சுதந்திரம் அடைந்து 72 ஆண்டுகள் கடந்தும் எப்படித் தொடர்ந்து பயன்படுத்தப்படுகிறது? இதற்கான விடை நாடாளுமன்றம், அதைப் போலவே நீதித் துறை இரண்டின் கூட்டுப் பங்களிப்பை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. அரசமைப்பு நிர்ணய சபையின் விவாதங்களின்போது, பேச்சுரிமைக்கும் கருத்துரிமைக்கும் ‘நியாயமான கட்டுப்பாடு’ என்ற பெயரில் தேசத் துரோகச் சட்டத்தை அறிமுகப்படுத்த சிலர் முயன்றனர். ஆயினும், மற்ற பல உறுப்பினர்களால், அதுவும் சுதந்திரப் போராட்டத்தின் போது அந்தச் சட்டத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களால், எதிர்ப்புக்குள்ளாகியதால் அந்த யோசனை கைவிடப்பட்டது. இந்தச் சட்டமானது தனது நாடாளுமன்றத்தால் விரைவில் தூக்கியெறியப்படும் என்று சில ஆண்டுகள் கழித்து நேரு கூறினார். எனினும், அது நடக்கவே இல்லை. ஆனால், 1962-ல் தேசத் துரோகச் சட்டத்தை அரசமைப்புச் சட்டத்திலிருந்து நீக்குவது குறித்த ஒரு வழக்கு இந்தத் தவறைச் சரிசெய்வதற்கான பொன்னான வாய்ப்பாக உச்ச நீதிமன்றத்துக்கு அமைந்தது.

அந்தச் சமயத்தில், தேசத் துரோகச் சட்டம் அரசமைப்புச் சட்டப்படி செல்லாது என்று ஏற்கெனவே இரண்டு உயர் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருந்தன. ஆயினும், உச்ச நீதிமன்றம் தனக்கான மாபெரும் வாய்ப்பைத் தவறவிட்டது. உயர் நீதிமன்றங்களின் தீர்ப்புகளைத் தள்ளுபடியும் செய்து, தேசத் துரோகச் சட்டம் அரசமைப்புப்படி செல்லும் என்று நிறுவியது. எனினும், உச்ச நீதிமன்றம் அந்தச் சட்டப் பிரிவின் எல்லையைக் குறுக்கவும் செய்தது; ‘பொது ஒழுங்குக்கு ஊறு விளைவிக்கக்கூடிய அல்லது வன்முறையைத் தூண்டக்கூடிய பேச்சு அல்லது கருத்துக்கு மட்டுமே தேசத் துரோகம்’ என்று எல்லை சுருக்கப்பட்டது. மற்ற சூழல்களில், ஒருவர் தனக்குப் பிடிக்காத பேச்சாக இருந்தால் ஒன்று அதைப் புறக்கணிக்க வேண்டும். இல்லையென்றால், பதிலுக்குத் தானும் பேச வேண்டும்; அப்படிச் செய்வதற்கு நேரமும் சந்தர்ப்பமும் இல்லையென்றால் - அதாவது உடனடியாகக் கலவரம் ஏற்படும் சூழல்களில் - பேச்சு சுதந்திரத்தை அரசு கட்டுப் படுத்துவதற்கு உரிமையுண்டு. இதைத் தொடர்ந்த பிற்காலத்திய தீர்ப்புகள் இதையே மேலும் மேலும் மெருகேற்றின. புரட்சிகரமான பேச்சுகளை அரசமைப்புச் சட்டம் அனுமதிக்கிறது என்றும்கூட சுட்டிக்காட்டின; அது எதைத் தடுக்கிறது என்றால், வன்முறையைத் தூண்டிவிடுவதைத்தான். அதாவது, எப்போது வேண்டுமானாலும் வன்முறை வெடிக்கலாம் என்பது போன்ற சூழல்களை.

### பெரிய இடைவெளி

பிரச்சினை என்னவென்றால், தேசத் துரோகச் சட்டப் பிரிவில் என்ன எழுதியிருக்கிறதோ அதற்கும், அதனை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் எப்படிப் புரிந்துகொண்டு சுருக்குகின்றனவோ அதற்கும் இடையில் பெரிய இடைவெளி இருக்கிறது. ‘அவநம்பிக்கை’, ‘வெறுப்பு’ போன்ற சொற்களெல்லாம் தெளிவற்றவை, அவற்றுக்கு விரிவான பொருள் உண்டு; அரசாங்கத்தை விமர்சிக்கும் எந்தப் பேச்சுக்கும் அது பொருந்தக்கூடும்.

தெளிவற்ற, விரிவான சட்டப் பிரிவுகள் காவல் துறையால் தவறாகப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றன. கூடவே, உச்ச நீதிமன்றத்தின் வார்த்தைகளும் கீழே உள்ள நீதிமன்றங்களுக்குப் போய்ச்சேர்வதில்லை. ஆக, இதற்கான பதில் என்னவென்றால் பேச்சுரிமை, கருத்துரிமையை அரசமைப்பின்படி உறுதிசெய்யும்வகையில் தேசத் துரோகச் சட்டத்தைப் புரிந்துகொள்வது அல்ல, அதை ஒட்டுமொத்தமாக நீக்குவதுதான். இதுதான் உச்ச நீதிமன்றம் 1962-ல் தவறவிட்ட வாய்ப்பு, அதை இன்னொரு முறை சரிசெய்யும் என்று நம்புவோம்.

சமீபத்தில் ஒரு உரையொன்றில் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி தீபக் குப்தா தேசத் துரோகச் சட்டத்தின் பிரதானமான பிரச்சினைகள் பலவற்றைப் பற்றிப் பேசினார்; நவீன ஜனநாயகத்தில் அந்தச் சட்டத்தின் பயன்பாடு குறித்து மறுபரிசீலனை செய்யும் நேரம் வந்துவிட்டது என்று குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டது போலவே தேசத் துரோகச் சட்டம் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்படும் இந்த 2019 கால கட்டத்தில் நீதிபதி தீபக் குப்தாவின் கருத்துகள் வரவேற்கத் தகுந்தவையே. பேச்சுரிமைக்கும் கருத்துரிமைக்கும் அரசமைப்புச் சட்டம் உத்தரவாதம் தருகிறது என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, அரசாங்கமும் மற்ற அதிகார மையங்களும் கடுமையாகவும் துடிப்புடனும் சில சமயம் பண்பற்ற விதத்திலும் கேள்விக்குள்ளாக்கப்படவும் சவாலுக்குள்ளாக்கப்படவும் செய்யலாம். மேலும், அரசைத்தான் என்றில்லை; தேசம், தேசியவாதம் போன்றவற்றைக் குறித்து நாம் கொண்டிருக்கும் கருத்துகளும் எல்லா சமயங்களிலும் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். அதுதான் பன்மை ஜனநாயகத்தின் சாரம். அது உரையாடலை அடிப்படையாகக் கொண்டதே தவிர, பலவந்தத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. அதைப் போன்ற ஜனநாயகத்துக்கு தேசத் துரோகச் சட்டம் ஒரு தடையாக இருப்பதால், அதை நீக்கியாக வேண்டும்.

**கவுதம் பாட்டியா ‘தமிழ் இந்து’ ஏட்டில் எழுதிய கட்டுரையிலிருந்து சில பகுதிகள்**

# தனியார் ரிசார்ட் ஆகிறதா, சபர்மதி காந்தி ஆசிரமம்?

குஜராத் மாநிலம் சபர்மதியில் 1917 முதல் இயங்கிவரும் காந்தி ஆசிரமத்தை, குஜராத் பாஜக அரசு கையகப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளதாகவும், இது ஆசிரமத்தை சீர்குலைக்கும் செயல் என்றும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அத்துடன், ஆசிரமம் அமைந்துள்ள 32 ஏக்கர் நிலத்தை தனியார் கார்ப்பரேட் நிறுவனத்திற்கு சூறையாடும் திட்டமும் இதன் பின்னணியில் இருப்பதாக காந்தியவாதிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

கடந்த 1917-ஆம் ஆண்டு, குஜராத்மாநிலம் சபர்மதியில் அமைக்கப்பட்டது,சபர்மதி ஆசிரமம் ஆகும். இது அன்றையகாலத்தில் ஹரிஜன் ஆசிரமம் என்றும் அழைக்கப்பட்டது. மயானம் மற்றும் சிறைச்சாலைக்கு இடையிலான தரிசு நிலத்தில், அமைக்கப்பட்டிருந்த இந்த ஆசிரமத்தில், மகாத்மா காந்தி 1917 முதல் 1930 வரை வசித்து வந்தார். காந்தியின் படுகொலைக்குப் பிறகும் தொடர்ந்து இயங்கி வரும் இந்த ஆசிரமத்தில், ஒரு மேல்நிலைப்பள்ளி, தலித் பெண்கள் தங்கும் விடுதி, ஆரம்பப் பள்ளி ஆசிரியைகளுக்கான பயிற்சிப்பள்ளி உள்ளிட்டவை அமைந்துள்ளன. குஜராத் காந்தி கிராமத்யோக் சார்பில்கதர்த் துணிகள் உள்ளிட்ட பல்வேறுகைவினைப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்படுவதுடன், விற்பனையும் நடைபெற்று வருகிறது. தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தையும் சபர்மதி ஆசிரமம் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில்தான், சபர்மதி காந்திஆசிரமத்திற்கு, அரசு சார்பில் நோட்டீஸ்ஒன்று அனுப்பப்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது. சபர்மதி காந்தி ஆசிரமம் மற்றும் அது நடத்தி வரும் கல்வி நிலையங்கள், அறக்கட்டளை போன்றவற்றை அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டு,அதற்கான மதிப்பீட்டுத் தொகையை ஆசிரம நிர்வாகத்திற்கு இழப்பீடாக வழங்கும்தகவல் அந்த நோட்டீசில் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.இந்தச் செய்தி, காந்தியவாதிகளை கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கிறது. இது ஆசிரமத்தின் சொத்துக்களை மனத்தில் கொண்டு, அவற்றை அபகரிக்க மேற்கொள்ளப்படும் முயற்சி என்று கொதித்துள்ளனர்.சபர்மதி ஆசிரமத்தில், 1917 முதல் 1930 வரை மட்டுமல்ல, இன்றும்கூட பல்வேறு சேவைகளின் வழியாக காந்திவாழ்ந்து கொண்டிருக்கிறார்; அப்படிப் பட்ட ஆசிரமத்தை நிர்மூலமாக்க முயற் சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

காந்தியின் கொள்ளுப் பேரனான துஷார் காந்தியும், இந்த செய்தியை குறிப்பிட்டு, குஜராத் அரசின் முயற்சிக்கு டுவிட்டர் பக்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார்.“குஜராத் முதல்வராக மோடி பதவி வகித்தபோது, ‘மகாத்மா மந்திர்’ என்ற ஒரு வர்த்தக மையத்தை ரூ. 200 கோடி செலவில் மோடி நிறுவினார். அதில், கலைப்பொருட்கள் விற்பனைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அவர் கூறினார். ஆனால், தற்போது அந்த வர்த்தக மையம், தனியாருக்கு விடப்பட்டு, ஹோட்டல் நிர்வாகம் ஒன்று அதனை நிர்வகித்து வருகிறது. சொகுசு ஹோட் டலாக மட்டுமே மகாத்மா மந்திர் அறியப்பட்டு வருகிறது.இவ்வாறு மகாத்மா மந்திரையே சரியாக நடத்த முடியாமல், தனியாருக்கு குத்தகைக்கு விட்டுள்ள குஜராத் அரசு,தற்போது காந்தி ஆசிரமத்தை கையகப்படுத்த முயற்சிக்கிறது” என்றும் காந்தியவாதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதுமட்டுமல்ல, பிரபல ஹோட்டல் நிறுவனமான லீமா குழுமத்துடன், குஜராத் அரசு 20 ஆண்டுகளுக்கான ஒப்பந்தம்ஒன்றைப் போட்டுள்ளது. அதனடிப்படையில், லீமா குழுமத்துக்கான நிலத்தை, குஜராத் அரசு தீவிரமாக தேடி வருகிறது. இந்நிலையில், சபர்மதி ஆசிரமத்தை கையகப்படுத்தும் திட்டத்தை, லீமா குழும ஒப்பந்தத்துடன் இணைத்துப்பார்க்காமல் இருக்க முடியவில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.சபர்மதி காந்தி ஆசிரமமானது, 32 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும். இங்கு ஆசிரம சேவைக்காக காந்தியின் அழைப்பை ஏற்றுவந்த சுமார் 200-க்கும் மேற்பட்ட குடும்பங்களும் மூன்று தலைமுறையாக வசித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆர்.எஸ்.எஸ். நிகழ்ச்சியை நேரலை செய்த தூர்தர்ஷன்

பாஜகவின் தாய் அமைப்பான ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தொடக்க விழா மற்றும் விஜயதசமி நிகழ்ச்சிகள், அரசு தொலைக்காட்சியான தூர்தர்ஷனில் (டிடி)நேரலை செய்யப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.பொதுவாக தனியார்அமைப்புகள், இயக்கங்களின் நிகழ்ச்சிகள் தூர்தர்ஷனில் ஒளிபரப்பாவதில்லை. குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத்தலைவர், பிரதமர் என அரசுத் தரப்பு நிகழ்ச்சிகள் மட்டுமே ஒளிபரப்பு செய்யப்படுவது வழக்கம். அப்படியிருந்தும், அண்மையில் சென்னை ஐஐடி-யில் பிரதமர் மோடி பங்கேற்றபட்டமளிப்பு விழா நிகழ்ச்சியை சென்னை தூர்தர்ஷன் ஒளிபரப்பு செய்யவில்லை என்று, சம்பந்தப்பட்ட அதிகாரி நடவடிக்கைக்கு உள்ளானார்.ஆனால், ஆர்.எஸ்.எஸ்.இயக்கத்தின் தொடக்க நாள்,விஜயதசமி நிகழ்ச்சிகள் மகாராஷ்டிரா மாநிலம் நாக்பூரிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்ற நிலையில், இந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பியது மட்டுமன்றி, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின்தோற்றம் குறித்த சிலைடுகளையும் கூடுதல் விவரங்களாக தூர்தர்ஷன் ஒளிபரப்பி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் விஜயதசமி நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர்கள் கட்காரி, வி.கே. சிங் ஆகியோரும், கார்ப்பரேட் முதலாளிகளில் ஒருவரான எச்.சி.எல். நிறுவனர் ஷிவ் நாடார் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பொதுத் தேர்வு ஒரு சித்திரவதை

*கற்றலும் கற்பித்தலும் இனிமையான மகிழ்வூட்டும் அனுபவமாக இருக்க வேண்டும் என்று நாம் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளுமே 'தேர்வு' என்ற ஒற்றைச் சொல்லால் முறியடிக்கப்பட்டு விடுகிறது – பேராசிரியர் யஷ்பால் (யஷ்பால் குழு அறிக்கை, 1993 – முன்னுரை)*

**ஆயிஷா நடராசன்**

ஐந்தாம், எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு நடப்பாண்டில் இருந்து பொதுத் தேர்வு நடத்தப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. (தற்போது 3 ஆண்டுகளுக்கு மட்டும் விலக்கு எனக் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்). இந்த அறிவிப்பு கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்துக்கு எதிரானது மட்டுமல்ல; உலகில் எங்குமே இல்லாத பேரிடரை நமது மண்ணில் செயற்கையாக உருவாக்கும் பின்விளைவைக் கொண்டது. பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி) எனும் ஒரே தேர்வை முன்பு ஆங்கிலேய அரசு வைத்திருந்தது. அதை முடித்தால் கல்லூரி (பி.யூ.சி.) போய்விடலாம். 'கோத்தாரி கல்விக் குழு' பி.யூ.சி.யை மேல்நிலை வகுப்பாக்கிப் பள்ளிக் கல்வியில் இணைத்தபோது பிளஸ் 2 தேர்வு உருவானது. இப்படியாக, பள்ளியில் இரண்டு பொதுத் தேர்வுகள் வந்தன. அதுவே பதினோராம் வகுப்பிலும் பொதுத் தேர்வு என இரண்டாண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்டது. பிளஸ் 1 பாடமே நடத்தாமல் நேரடியாக பிளஸ் 2 பாடங்களை நடத்தும் தனியார் பள்ளிகளை வேறுவகையில் கண்காணிக்க முடியாமல் கொண்டு வரப்பட்ட தேர்வு இது.

இந்தத் தேர்வு காரணமாகச் சுமார் ஒன்றரை லட்சம் மாணவர்கள் தமிழகப் பள்ளிகளில் இருந்து காணாமல் போயிருக்கிறார்கள். இந்த அதிர்ச்சியூட்டும் புள்ளி விபரத்தைத் தமிழகப் பள்ளிக் கல்வித் தேர்வுத் துறையே வெளியிட்டுள்ளது. இவர்கள் பாலிடெக்னிக் (டிப்ளமா) படிக்கப் போயிருக்கலாம் எனத் தலைமை ஆசிரியர்கள் சொல்கிறார்கள். பிளஸ் 1 பொதுத் தேர்வில் தேர்ச்சி அடையாத இந்தச் சிறார் அங்குள்ளனரா என விசாரித்தால், கடந்த நாலைந்து ஆண்டுகளில் அவர்களது சேர்க்கை பல ஆயிரம் குறைந்து விட்டதாகவும் அந்த மாணவர்கள் தங்களிடம் வர வாய்ப்பில்லை என்றும் பட்டயத் தொழிற்கல்வித் துறை சொல்கிறது.

பிளஸ் 1-ல் சேர்ந்து பொதுத் தேர்வின் மூலம் பன்னிரண்டாம் வகுப்பில் தொடராமல் போன ஒன்றரை லட்சம் சிறார் நமக்குப் புகட்டும் பாடம் என்ன? ஒரு ஊரில் புயல், சுனாமி தாக்கும்போது மனித உயிர்கள் பலியாவது போல மாணவர்களைக் கல்வியைவிட்டே காணாமல் போக வைக்கும் கல்வி சுனாமிதான், பொதுத் தேர்வு முறை.

### பொதுத் தேர்வு எனும் வர்த்தகம்

ஆங்கிலேயர் ஆட்சியின்போது 1882-ல் வில்லியம் ஹன்டர் என்பவருடைய தலைமையில் இந்தியா வந்த கல்விக் குழுதான் முதலில் பொதுத் தேர்வை அறிமுகப்படுத்தியது. பள்ளி இறுதித் தேர்வு என்று அதற்குப் பெயர். ஆங்கிலேய ஆட்சிக்குத் தேவையான எழுத்தர், கணக்காளர் வேலை களுக்கு ஆளெடுக்க அந்தத் தேர்வைப் பயன்படுத்தினார்கள். 1979 வரை அந்த எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு நடைமுறையில் இருந்தது. பிறகு அறிமுகமான பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 தேர்வுகள் அடிப்படையில் ஆங்கிலேயர் நடத்திய பொதுத் தேர்விலிருந்து வேறுபடுகின்றன. உதாரணமாக, அன்று எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழ், ஆங்கிலப் பாடங்களில் 40 மதிப்பெண் எடுக்க வேண்டும். ஆனால், ஏனைய பாடங்களில் தேர்ச்சி மதிப்பெண் என்பது அந்த ஆண்டு தேர்வு எழுதியவர் பெற்ற சராசரி மதிப்பெண் அடிப்படையிலேயே முடிவுசெய்யப்பட்டது. அத்துடன் ஒரு பாடத்தில் 80 மதிப்பெண் பெற்று, மற்றொரு பாடத்தில் தேர்ச்சி பெறுவதற்கு உரிய மதிப்பெண்ணை பெறத் தவறினால் அதிக மதிப்பெண்ணிலிருந்து பத்துக்கு ஒரு மதிப்பெண் எனத் தேர்ச்சி பெறாத பாடத்துக்குச் சேர்த்துத் தேர்ச்சி வழங்கப் பட்டது. இன்று நடக்கும் பொதுத் தேர்வு இத்தகைய நெகிழ்வுத் தன்மை இன்றி முரட்டுத்தனமான அம்சங்களைக் கொண்டது. மாதிரித் தேர்வுத்தாள் வர்த்தகம், நோட்ஸ்/ கைடு வர்த்தகம், டியூசன் பயிற்சி வர்த்தகம், தனியார் பள்ளிக் கட்டண வர்த்தகம் எனப் பல வர்த்தகங்களின் கூட்டுவணிகமாகவே இன்றைய பொதுத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. இதன் பொருட்டு பள்ளி மாணவர்களது பெற்றோர் சில நேரம் கல்லூரிக் கட்டணத்தைவிடக் கூடுதலாகப் பணம் செலவழிக்க வேண்டியுள்ளது. இதனால் மாணவர் தலையில் அத்தனை சுமையும் சுமத்தப்படுகிறது. இந்நிலையில் ஐந்து, எட்டாம் வகுப்பு மாணவர்கள் இத்தகைய சூழலுக்குத் தள்ளப் பட்டிருப்பது கொடுமை.

### பொதுத் தேர்வு எனும் வன்முறை

**அதிகாலை நான்கு மணி டியூசன் முதல் இரவு ஒன்பது மணி சிறப்புப் பயிற்சிவரை ஆண்டு முழுக்கப் பொதுத்தேர்வு தயாரிப்பு எனும் சித்ரவதை குழந்தைகளை வாட்டி வதைக்கிறது.** அதிலும் தேர்வு முடிவு வெளிவரும் நாளில் நடக்கும் தற்கொலைகள் பொதுத் தேர்வுகளுக்குச் சிறப்பு வன்முறை அந்தஸ்தை வழங்குகின்றன. அதிலும் 'பலூன் பருவம்' என்று அழைக்கப்படும் பத்து வயதில் (5-ம் வகுப்பு) குழந்தைக்குத் தேர்வு வைப்பதே தவறு. உடல்ரீதியாக குரல்வளை, உள்நாக்கு வளர்ச்சி முழுமை அடையாத பருவம் அது. அதனால் சத்தமாக வாய்விட்டுச் சொல்லும் (Oral Drill) பயிற்சி அதிகம் தர வேண்டிய காலம் அது. ஒரு சொல், ஒருவரி எழுதும் பருவம். சாலையில் நடந்து கவனமாக வீட்டுக்குச் செல்லத் தெரியாமல் யானை, மிட்டாய்க்காரர், ஐஸ்கிரீம் வண்டிக்குப் பின்னால் செல்லும் பழக்கத்தை விடாத பருவத்தின் மீது பொதுத் தேர்வைத் திணிப்பதைவிடப் பெரிய வன்முறை வேறெதுவும் இல்லை. எட்டாம் வகுப்புக் குழந்தைகள் (12, 13 வயதினர்) மார்புக்கூடு முழுமைபெறவும் முதுகுத்தண்டு நிலைபெறவும் குறைந்தபட்சம் ஒன்பதில் இருந்து பத்து மணிநேரம் வரை உறங்க வேண்டியவர்கள். மன அழுத்தம் தரமுடியாத மென்மையான இரண்டும் கெட்டான் பருவம் அது. அவர்களைத் தனிமைப்படுத்தி தூக்கத்தைக் கெடுத்துப் பொதுத் தேர்வு எழுதப் பயிற்சி தருவது சித்ரவதைதான். 1966-ல் தயாரிக்கப்பட்ட கோத்தாரிக் கல்விக் குழுவின் அறிக்கையைப் பத்தாண்டுகளுக்கு மேல் விவாதித்து, 1979-80ல்தான் தமிழ்நாடு அதை ஏற்று அமல்படுத்தி பிளஸ் 2 தேர்வைத் தொடங்கியது. ஆனால், இன்றோ கஸ்தூரி ரங்கன் கல்விக்குழுவின் பரிந்துரைகளைச் சட்டப்பேரவையில்கூட விவாதிக்காமல் இத்தனை அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டிய அவசரமும் நிர்ப்பந்தமும் என்ன?

### தேர்வுகளும் மற்ற நாடுகளும்

பிற நாடுகளில் தேர்வே இல்லையா? அர்த்தமுள்ள வாழ்க்கைக்குத் ஒருவரை தயார்படுத்துவதே கல்வி. அப்படிப்பட்ட கல்வியை நாம் எந்த அளவுக்கு வெற்றிகரமாகக் கற்பிக்கிறோம் என்பதை ஆக்கப்பூர்வமாக மதிப்பிடவே தேர்வு. தேர்வு வெறியில் முன்னோடி தேசம் சீனா. கி.பி. 101-லேயே ஹான் பேரரசால் அங்கு நுழைவுத் தேர்வு முறை கொண்டு வரப்பட்டது. இப்போதும் கவோ கேவோ (Gao Kao) தேர்வுதான் கல்லூரிச் சேர்க்கையைத் தீர்மானிக்கிறது. ஆனால், பள்ளி இறுதித் தேர்வு தவிர வேறு பொதுத் தேர்வு அங்கு இல்லை. இடைநிற்றல் எனும் பேச்சுக்கே இடமில்லை. மூன்றாம் வகுப்புவரை ஜப்பானில் தேர்வு என்பதே கிடையாது. நான்கு, ஐந்து, ஆறாம் வகுப்புகளில் வாய்மொழித் (oral) தேர்வு, படமாக வரைதல், இசைத்தல் போன்ற தேர்வுகளே உள்ளன. ஜெர்மனி, இஸ்ரேல், கனடாவில் எட்டாம் வகுப்பு வரை நேர்முகத் தேர்வு மூலமாக மட்டுமே மாணவர்களுடைய கல்வி அறிவு சோதிக்கப்படுகிறது. அவ்வளவு ஏன் நம் கல்வி அமைச்சர் சமீபத்தில் விஜயம் செய்த பின்லாந்தில், ஏழாம் வகுப்பு, எட்டாம் வகுப்பில் தேர்வு என்பது திறந்த புத்தகத் தேர்வு முறையே. அங்கு வினாத்தாள் என்பது ஒரு 'புக்லெட்'. விடைகளை வீட்டிலும் பள்ளியிலுமாக மாணவர்கள் புத்தகத்தில் தேடி எடுத்துப் பார்த்து எழுதி வரலாம். பின்லாந்து உலகக் கல்வி தர வரிசைகளில் முதலிடத்தில் உள்ளது.

**கட்டுரையாளர்: கல்வியாளர்**

## தேசத் துரோக வழக்கு: கழகத் தலைவர் கொளத்தூர் மணி கண்டனம்

*நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பேட்டி:*

*தனி மனிதர்கள் மீது மதத்தின் பெயரால் கும்பலாக தாக்குதல் நடத்தக்கூடாது என்று கடிதம் எழுதியதற்காக ஆய்வாளர் இராமச்சந்திர குஹா, ரேவதி, இயக்குனர் மணிரத்னம் உள்ளிட்ட 49 பேர் மீது தேச துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் காந்தியாரைக் கொன்ற கோட்சேயை புகழ்ந்து தென்னாட்டுக் கோட்சே என்று எச்.இராஜாவிற்கு சுவரொட்டி அடிக்கப்படுகிறது. எது தேசதுரோகம் என்று தெரியாத நிலை உள்ளது. கீழடி அகழ்வாராய்ச்சி மூலம், இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ் நகர நாகரிகம் வெளியே தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்வதற்கு மத்திய அரசு விரும்பவில்லை. தமிழகத் தொல்லியல் துறை மூலம், கீழடி ஆய்வை தொடர்ந்து அங்கு அருங்காட்சியகம் அமைக்க வேண்டும். அதே நேரம் பூம்புகார், ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு உள்ளிட்ட இடங்களில் தொடர் ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.*

*ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 7 தமிழர்கள் விடுதலைக்கு தமிழக அமைச்சரவை பரிந்துரைத்து 400நாட்கள் ஓடி விட்டன. பஞ்சாப் காங்கிரஸ் ஆட்சி, அம்மாநில முன்னாள் காங்கிரஸ் முதல்வர் பியாந்த் சிங்கை கார் வெடிகுண்டு மூலம் கொலை செய்தவரையே தூக்குத் தண்டனையிலிருந்து விடுவித்திருக்கிறது. இத்தனைக்கும் நான் தான் கொலை செய்தேன் என்று ஒப்புக் கொண்டவர் அவர். 7 தமிழர் விடுதலையை ஆளுநர் கிடப்பில் போட்டிருப்பது அதிகார முறைகேடு" என்றார் கொளத்தூர் மணி.*

குறிப்பு: நாடு முழுதும் எழுந்த எதிர்ப்பினால் 49 பேர் மீதான தேச துரோக வழக்கை பீகார் காவல்துறை கைவிட்டுள்ளது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 17th october 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN